செ.வெ.எண்:52/2020 நாள்:25.06.2020

**பத்திரிக்கைச் செய்தி**

**சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.ஜெயகாந்தன்,இ.ஆ.ப., அவர்கள் செய்திக் குறிப்பில் தெரிவித்ததாவது,**

தமிழ்நாட்டினை பூர்வீகமாக கொண்ட முப்படைகளில் அவில்தார் மற்றும் அதற்கு இணையான படைத்தரம் வரையிலான மறுவேலைவாய்ப்பு ஏதும் பெறாத, சொந்த வீடு ஏதும் இல்லாத முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் விதவையர் 01.04.2020-க்கு பிறகு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் மற்றும் ரிசர்வ் வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளிலிருந்து வங்கிக்கடன் பெற்று சொந்தமாக புதியதாக கட்டப்படும் / வாங்கப்படும் முதல் வீட்டிற்கு தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) மானியத் தொகை வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது. இத்திட்டம் குறித்து மேலும் விவரமறிய சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் விதவையர்கள் சிவகங்கை மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தை நேரில் அல்லது **04575-240483** என்ற தொலைபேசி எண்ணில் அணுகி விண்ணப்பம் மற்றும் விபரம் பெற்று பயனடையுமாறு சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.ஜெயகாந்தன்,இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.

**::வெளியீடு::**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**சிவகங்கை.**